Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆவணி 28௳ (1889) ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும, வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஐப்பசிமீ ௩௰ உ வெள்ளிக்கிழமை (15 NOVE. 1957) [இல-௩௨]

## தமிழ்ப் பல்கலைக் கழகம் தகாதென்கின்றார்

## 'நியாயமான உபயோக'நெறி பேசும் பிரதமர்!

## மொழி வளர்ச்சி மோசமான வகுப்புவாதமாகுமாம் !!

எடுத்தவுடனே பேச்சு நிகழ்த்தச் சற்றும் பின் வாங்காத பிரதமரின் சொற்பெருக்குகளில் ஒவ்வொரு வசனத்தையும் ஊடுருவி அலசிப்பார்த்தால் ஒவ்வாதன வற்றை உரைப்பதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வர் இவர் என்பது தெளிவாகும்.

நியாயமான உபயோகம் பிரதேசசபைகள் என்பன வற்றை அமைக்கும் சட்ட திட்டம் ஏன் இன்னும் வகுக்கப்படவில்லையென்று பிரதமரைச் சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் மனக் கவலையுடன் வினு எழுப்பிய அதேகாலத்தில் திரு. பண்டாரநாயக தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவுவது தகாதென இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிற் பேசும்பொழுது குறிப்பிட்டுத் தான் அந்த இயக்கத்தை ஆதரிக்கவில்லையென்றும் கூறியிருக்கின்றார்.

உண்மையிலே பிரதமர் பண்டாரநாயகவின் உள்ளக் கிடக்கையென்ன என்பதை ஆராய்வதற்கு ஒரு ஆணைக் குழுவைப் பொதுசனம் நியமித்தல் அவசியமாய்விட்டது.

எல்லாருக்கும் எல்லாமாய் ஒருவருக்கும் ஒன்று மல்லாதவராய் இருப்பவர் என்ற தெய்வ நிலையிலே இலங்கைப் பிரதமரை வைத்து எண்ணலாம் என்றால் அதுவும் சரியாகாது. காரணம் ஒரு இனத்துக் குரியவராயிருந்த நிலையிலேயே எல்லாருக்கும் எல்லாமாய் இருக்கின்றார் பண்டாரநாயக.

**மேலும் 'மேத்தானந்தா' விபரீதம்**

பிடிகொடாத வகையில் அரச நிர்வாகம் நடத்தப் பெரிதும் முயன்று வரும் முதல் அமைச்சர் ஒரு பக்கம், தமிழர்களின் சர்வாதிகாரத்துக்கு அடிப்படையாகின்றது 'நியாயமான உபயோக' சட்டதிட்டம் என்று மேத்தானந்தா மறுபக்கமாக மேலும் மேலும் விபரீத விமரிசனம் செய்துகொண்டு வருகின்றார். இசுலாமிய வாலிபர் சங்கத்திலே சொற்பொழிவாற்றும்பொழுது திரு. மேத்தானந்தா ஐயாயிரம் தமிழர்களுக்கு உடனடியாக அரசாங்க வேலைக்கு இடம் அளிக்கப்போகின்றது இந்த நியாயமான உபயோகச் சட்டதிட்டம் என்று எண் புள்ளி விபரங்களை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கிய மேதாவிகளில் திரு. மேத்தானந்தவும் ஒருவர். ஆகவே பிரதமரும் மேத்தானந்தவும் இரு பக்கங்களிலும் இருந்து தமிழர்களை ஒதுக்கும் உபாயத்தை நிறைவேற்றுவதற்கே இவ்வாறு உரையாடிக்கொண்டு வருகின்றார்கள் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது.

### சாவகச்சேரிப் பட்டினசபைத் தேர்தல்

சாவகச்சேரிப் பட்டின சபைத் தேர்தலில் 7-ம் வட்டாரத்துக்குத் தற்போது சபைத் தலைவராயிருக்கும் திரு. கே. இராமநாதன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். ஏனைய எல்லா வட்டாரங்களிலும் போட்டிகளிருக்கின்றன.

### காந்தியடிகளின் உருவச்சிலை

காந்தியடிகளின் உருவச் சிலை ஒன்று மட்டக்களப்பில் நிறுவுதற்கு வேண்டிய ஆரம்பச்செயல்நடைபெறுகின்றதாக அறிய வருகின்றது. காந்தீய சேவாசங்கத்தார் இத்தொண்டைச்செய்கின்றனரென்று இத்தொடர்பிற் கூறப்படுகின்றது.

## முப்பெரும் தமிழ்த் தலைவர்களுக்குச் சிலை நாட்டுவது முதற் கடமை

(யாழ்ப்பாண மாநகரசபையிலே முதலியார் சே. முத்துத்தம்பி அவர்கள் கொண்டு வந்த ஆலோசனை. இது நிறைவேறியது.)

எங்கள் நாவலர்பெருமானும், சேர். பொன் இராமநாதவள்ளலும் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களும் ஈழவள நாடு ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர்கள் மூவரேயாம். இவர்கள் எங்கள் நாட்டுக்குச் செய்த தொண்டுகள் அளப்பில. அவைகள் ஏட்டிலடங்கா. பேச்சில் சொல்லவும் முடியா.

நாவலர் பெருமான் நைட்டிகப் பிரமச்சாரியாயிருந்து கடைசி மூச்சுவரைக்கும் தொண்டாற்றியவர். அவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றையும் ஐயந்திரிபறக் கற்று, கல்வித் தொண்டு புரிந்து தமிழ் மொழியிற் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த துறவி. துறவிக்கு வேந்தன் துரும்பென்று வாழ்ந்து போயினர். சைவசித்தாந்தக் கடல். மலையசைந்தாலும் தன் நிலையிலிருந்து அசையாதவர். மானத்திற்காக உயிரையும் துரும்பாக மதித்தவர்.

சேர். பொன் இராமநாத வள்ளல் குறைந்தது 50 ஆண்டுகளுக்கு மேற் பல்வேறு துறைகளில் மனித சமுதாயத்துக்கு மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபடத் தொண்டாற்றியவர். தன் காலத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்கா [illegible] பேச்சாளர் உலகப் பெரியார் ஒருவராகத் திகழ்ந்தவர். இவர் காலத்திலே தான் தமிழ்ச் சமுதாயம் உச்ச நிலை அடைந்திருந்தது. இவர் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்த காலத்திலே தான் ஈழத்துத் தமிழர் மானத்துடனும் மரியாதையுடனும் வாழ்க்கையை நடத்தி வந்தனர். இவர் யாழ்ப்பாணத்தில் இரண்டு உயர்தரக்கல்லூரிகளை நிறுவிச் செவ்வனே நடத்தி,

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## நவாலியூர்ப் புலவர்களும் புலவர் தம்பையா அவர்களும்

**நா. சேனாதிராசா,**
**யாழ்-கமக்காரர் சங்கத் தலைவர்.**

நவாலியூரில்எத்தனையோ மேதாவிகள் பிறந் திறந்தொழிந்தபின், சோமசுந்தரப்புலவரும், புலவர் தம்பையாவும், சைவத்திற்கும், தமிழிற்கும், அரும் பெரும் பாடுபட்டுத் தொண்டு செய்தார்கள். சோமசுந்தரப் புலவரால் எழுதப்பட்ட புத்தகங்கள் அதிகம். அநேகம் புத்தகங்கள் அச்சு வாகனம் ஏறாமல் இருக்கின்றன. தமிழ் மக்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டு அச்சுவாகனம் ஏற்ற வேண்டும். சோமசுந்தரப் புலவர் இறந்த பின்னர் கொஞ்சக்காலமிருந்து இப்போது இறந்தவர் தம்பையா அவர்கள். இவரின் அறிவும், ஆற்றலும், கடவுட்பக்தியும் அளவிடற்கரியவை. யாழ்ப்பாணத்தில் சைவக்சிறந்த உரையாசிரியராய், கோயில்களிற் புராணபடனத்தைச் சிறப்பாய் நடத்தினர். எத்தனையோ பெரியார்கள் இந்தக் காலத்திற் பயன்சொல்லும் ஆசிரியர்களாய்இருக்கின்றார்கள். ஆனல் தம்பையா அவர்களின் சொற்சுவையும் பொருட் சுவையும், சித்தாந்த ஞானமும் கேட்போரைப் பிரமிக்கச் செய்யும் தன்மையும், இக்காலத்துஉரையாசிரியர்களிடம் இல்லை. உரையாசிரியராய் மாத்திரமில்லாது, சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலுள்ளஞான நுட்பங்களையெல்லாம் கோயில்களில், மடங்களில், குருபூசை மடங்களில் பிரசங்கஞ் செய்த பெரியார். இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பொன் ஆடை போர்த்து அன்பளிப்பு விழா இவருக்கு நடைபெற்றது. இவர் மரிக்கும்போது வயசு 97. தமிழ் நாடும், சைவநாடும் செய்த புண்ணிய வயத்தால், இப்பெரியார் நவாலியூரில் பிறந்து தொண்டாற்றினர். இப்போது இறைவனடி சேர்ந்தார்.

## பழந் தமிழ் நூல்களைப் பாதுகாப்பதற்கு

( முதலியார் முத்துத்தம்பி கொணர்ந்த இந்த ஆலோசனையும் ஏற்கப்பட்டது )

சுதேச வைத்தியம், நாடகம் இவைகளைப்பற்றிய பலஏடுகள் இன்னமும்ஏட்டு வடிவிலேயே இருக்கின்றன. இவைகள் நீருக்கும் நெருப்புக்கும் செல்லுக்கும் இரையாகி அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதை நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உள்ள எந்தத் தமிழ் மகனும் சகித்துக் கொண்டிருக்க மாட்டான். ஏட்டு வடிவத்திலுள்ள நூல்களைத்தேடிச் சேர்த்து அச்சிலேற்றவும், அங்கொன்று மிங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கிற அருமருந்தன்ன நூல்களை அச்சுவாகனம் ஏற்றுவிக்கவும் யாழ்ப்பாணம் மத்திய வாசிகசாலைக்கெனச் சேமித்திருக்கும் நிதியில் ரூபா 5000 இக் கைங்கரியத்துக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் இக் கைங்கரியத்தைச் செவ்வனேசெய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்றும் இச்சபை [illegible] கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி வூ ஐப்பசி மீ ௩௦-உ வெள்ளிக்கிழமை

## புனித உணவே பொருந்தும் உணவு

சைவசமயமொன்றே புலாலுண்ணுமையைப் புண்ணியம் என்றும் அதை மறுத்தலைப் பாவம் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவது. ஆனல் மற்ச மாமிச போசனம் சற்றும் பொருந்தாததென்று மேலைத் தேசங்களிலும் உணர்ச்சி எழுந்திருப்பதை மறுக்க முடியாது. உணவு ஆராய்ச்சியாளர்களும் தத்துவ ஞானிகளும் இந்த முடிபுக்கு வந்திருக்கிறார்கள். இதன் பயனுகப் பதினைந்தாண்டுகளாக உலகத் தாவர உணவு மாநாடு நடைபெற்று வருகின்றது. பாரத நாட்டிலே பம்பாய் நகரத்திலே இவ்வாண்டு மாநாட்டைச் சனுதிபதி இராசேந்திரப்பிரசாத்து ஆரம்பித்து வைக்கும்பொழுது அரிய சொற்பொழிவொன்றையாற்றியிருக்கின்ருர். அன்பை அடிப்படையாகக்கொண்ட இந்த இயக்கம் உலக உணர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய வகையில் வளர்ந்து வருமேயானுல் விஞ்ஞானிகளின் நுண்ணறிவாலும ஆராய்ச்சித் திறனுலும் உற்பத்தி செய்யப்படும் அணு ஆயுதங்களையும் வான் வெளிக்கப்பாற் பாயும் பொறி ஆயுதங்களையும் வல்லரசுகள கையாளமாட்டாவென்பதுண்மை. 'படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன் உடல்சுவை உண்டார் மனம்' என்றுவமித்தார் வள்ளுவனுரும்.

உலக அமைதிக்காக, உண்மை நெறி நிலவுவதற்காக ஊரவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்காக உழைத்து வருகின்ரேம் என்று வாய்ப்பறை சாறறும் அமைச்சர்களும் அரசியற்றலைவர்களும் பொருந்தாத புனிதமில்லாத உணவு உட்கொள்ளுகின்றவர்களாயிருந்தால் அவர்கள் உள்ளத்திலே அன்பு ஊற்றெடுப்பது எங்ஙன்?

"தன்னூன் பெருக்கற்குத்
தான்பிறிதூ னுண்பாண்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்ற மதிமொழிகளை இவர்கள் கற்றுணர்வார்களாக.

எல்லா உயிரும் தொழும் மதிப்புடையவனே அரசன் ஆக, அமைச்சன் ஆக, தலைவன் ஆக வழிகாட்டக்கூடிய ஆற்றல் படைத்தவன். உலக நூலாக அறத்தின் மறையாக எந்நாட்டவர்களாலும் எம்மதத்தவர்களாலும் உவந்தேற்றுக்கொள்ளப்படும் திருக்குறளில் அன்ரே 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்ற பொன்னனையநன்மொழிகள் காணப்படுகின்றன.

புனித உணவு இபக்கத்துக்குச் சைவச் சங்கங்கள் நிலையங்கள் தலைவர்கள் ஊக்கமளித்தல் வேண்டும். மேன்மைகொள் சைவநீதியாக அமைந்த புலாலுண்ணுப் புனிதநெறியே உலகததை உய்விக்க உகந்த வழி என்பது உண்மை. முக்காலும் உண்மை.

---

திருக்கேதீச்சரநாதர் கார்த்திகைச்

## சோமவாரத் திருநாட்கள்

:0:

நிகழும் ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 3, 10, 17.24 ஆகிய (18-11-57) (25-11-57) (2, 9-12-57 திகதிகளில் வரும் சோமவாரத் திருநாட்களில் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் கௌரி அம்பாள் சமேத ஸ்ரீ திருக்கேதீச்சரநாதருக்கு விசேட பூசை அபிடேகங்களும் மகோற்சவங்களும் நடைபெறத் திருவருள் துணைசெய்துள்ளது. இத் தினங்களில் காலையில் திருக்கேதீச்சரநாதருக்கு விசேட பூசை அபிஷேகங்களும், நண்பகலில் சிவனடியார் பூசை, மகேஸ்வர பூசையும் மாலையில் சைவப் பிரசங்கங்களும் சுவாமி அம்பாள் திருஉலாக்காட்சி வைபவங்களும் நடைபெறும். சைவ அன்பர்கள் பலரும் சிவனடியார்களும் ஆலயத்திற்கு வந்து இப் புனித வைபவங்களில் பங்குபற்றி அம்மை அப்பர் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் பிரார்த்திக்கின்ரேம்.

ஆலயத்திருப்பணி வேலைகள் 19-10-57 தொடக்கம் மறுபடியும் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் இருந்து வந்த சிற்ப அறிஞர் திரு. ம. செல்லக்கண்ணு ஸ்தபதியாரும் அவருடைய உதவி ஆட்களும் திருப்பணி வேலைகளைச் செய்துகொண்டிருக்கிருர்கள். மேற்குப் பரிவாரத்தில் விநாயக சுப்பிரமணிய மூர்த்திகள் ஆலயங்கள் உட்பட ஏனைய பரிவார ஆலயங்களின் திருப்பணிவேலைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன: சோமவார தினத்தில் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணி வேலைகளையும் பார்த்துப் பக்தி சிறந்தோங்க இத் தருணம் வாய்ப்பானதாக இருக்கும் என்று திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும் அறியத் தருகின்றனர்.

---

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### ஐக்கிய முன்னணியிற் சிக்கல் முன்னணி

ஒற்றுமையான குடும்பம், ஒரே எண்ணம், ஒரேகுரல என்று பிரதமர் வருணித்த ம ஐ மு. மந்திரிசபையின் உணமை நிலைமையை நெற்காணிச் சட்டதிட்டம் அம்பலமாக்கி விட்டது. நான் விலகுதல் வேண்டும் இல்லையேல் நீங்கள் அகன்று விடுதல் வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு பிரதமரின் தலையிடி அதிகரித்து விட்டது. இருந்தும் இத் திட்டத்தின் கருத்துக்களைப் பற்றிய தீர்ப்புப் பிரதமரிடமே ஒப்புவிக்கப்பட்டது. காரணம் எதிர்ப்புக் காட்டிய மந்திரிமாருக்குப் பதவி வெறுப்பு இன்னும் எழாதமையே.

### நீதி மன்றத்திலே நியாயமான உபயோகப்!

சிங்களப் பகுதிகளிலேயுள்ள நீதிமன்றங்களிலே சிங்களம் அரசகருமமொழியாகுமாம். அப்படியானல் கொழும்பு, கண்டி, காலி, குருநாக்கல், அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை முதலிய இடங்களிலே நீதிமன்றத்துத் தமிழ் வழக்கறிஞர்களின்கதியென்ன? நியாயமான அளவு தமிழ் உபயோகம் என்ற நெறி எவ்வாறு செய்கையில் வரும்? நெற்காணிச் சட்டதிட்ட நெருக்கடியுடன் இந்த நெருக்கடியும் சேர்ந்தாற் பண்டாரநாயக பதவி நீக்கிப் பரதேசம் சென்று விடுவார் போலும்.

### உருத்திரபுரம் சிவாலயத்தில் சோமவாரம்

—0—

நிகழும் ஏவிளம்பி வூ கார்த்திகை மாசம் 3-ந் திகதி (18-11-57) முதற் சோமவார தினத்தன்று மிகவும் புராதனமான உருத்திரபுரம் சிவாலயத்தில் அப்பகுதிக் குடியேற்றஅதிகாரி திரு. க. தி. சம்பந்தர் அவர்களின் உபயமாக விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுமென அறிகிறேம்.

---

### நாவலர் ஆச்சிரமத்தில் அத்திபார விழா

சென்ற புதன் கிழமை இரவு ஒன்பது மணிவரையில் சைவ பரிபாலனசபை நாவலர் ஆச்சிரமத்தில் சிவபூசை மண்டபத்துக்கும் மடைப்பள்ளிக்கும் அத்திபாரம் இடப்பட்டது விசேட பூசை ஆராதனையின் பின வடபகுதி வித்தியாதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் அத்திபாரத்துக்கு முதற் பொளி மண்வெட்டும் பணியைச் செய்ய சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள் அத்திபாரம் இடும் பணியைச் செய்தார். சபையின் முக்கிய அங்கத்தவர்களும் பிற அன்பர்களும்சமுகமளித்து விழாவிற் பங்குபற்றினர்.

---

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 17—11—57 —— 23—11—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

ஒரு தளப்பமான வாரம், உம்முடைய எல்லாக் கருமங்களிலும் நீர் மிகக் கவனமாயிருககவேண்டும், அல்லது நீர் பழிமொழிக்காளாக்கப்படுவீர். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் அவமானங்களுக்கும் இடமுண்டு தேகசுகமும் தொடர்ந்து திருப்தியீனமானதாயேயிருக்கும். வியாழன் பிற்பகல் வெள்ளி சனி எல்லாவற்றிலும் பழுதானவை.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

குடும்பக் கருமங்கள் மிகப் பழுதான நிலைமையிலிருக்கும் குடும்பச்சூழலிற் சுகவீனத்துக்கும், பிழை எண்ணங்களுக்கும் அவமானங்களுக்கும் இடமுண்டு. ஆனல் உம்முடைய பகைவரை நீர் வெல்லக் கூடியதாயிருக்கும். தனலாபங்களும் நிச்சயம்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

இந்தவாரம் இடைஞ்சல்களிலிருந்து நீர் நீங்கக்கூடியதாயிருக்கும். எதிர்ப்பு நீங்கிவிடும். பணநிலைமைகள் திருந்த வேண்டும். சொந்தச் சிக்கல்கள் ஒழுங்குபண்ணப்படும். பிழை எண்ணங்களும் நீக்கப்படும். தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது,

**கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

மனச் சமாதானமிருக்கமாட்டாது [illegible] மானஞ் செய்யமாட்டாது நீர் வருத்தப்படுவீர். இனத்தவர்களுக்கும் சண்டைகளுக்கும் சிறு அபாயங்களுக்கும் இடமுண்டு.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

பணக் கருமங்களுக்கு நல்ல வாரம். ஆனல் இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளும் மனச்சலனமும் உண்டாகும். நண்பர் அதிக உதவிசெய்வர், காணிப் பொருள்கள் மூலம் இலாபங்களுக்கும் இடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும். இலாபங்களும் சகோதர சகோதரிகளிடமிருந்து உதவியும் நிச்சயம் உத்தியோக சித்திக்கும் புது முயல்சிகளில் இலாபங்களுக்கும் இடமுண்டு.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

கருமங்கள் இந்தவாரம் குழப்பமாயிருக்கும். உம்முடைய சொந்தச் சிக்கல்களை நீக்கமாட்டாது வருத்தப்படுவீர். சண்டைகளுக்கும் நண்பருடன் பிழை எண்ணங்களுக்கும் இடமூண்டு, செலவதிகரிக்கும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உம்முடைய வருமானம் இந்த வாரம் திடமானதாயிருக்கும் ஆனல் சில புதச் செலவுகளையும் நீர் சமாளிக்க வேண்டிவரும். அலுவல் நடைமுறைகளில் மாற்றங்களுக்கிடமுண்டு. காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இலாபங்கள் நிச்சயம்,

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

உம்முடைய மனம் இந்தவாரம் சமாதானமாயிருக்க மாட்டாது. பணத்துறையில் ஒருநல்லவாரம் உம்முடைய முயற்சிகளில் நீர் அதிகம் இலாபமடைவீர். ஆனல் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு. கண் நோய்களுக்கிடமுண்டு,

**மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

தனலாபங்கள் நிச்சயம், பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தர வேண்டும், நீர் எதிர்ப்பை வெல்லக்கூடியதாயிருக்கும். ஆனல் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

இந்த வாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் தொந்தரவானவையாயிருக்கும். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், எதிரில் நல்ல காலம் வருகின்றது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

வாரத்தின் முதல் மூன்று நாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழம் தொந்தரவானவையாயிருக்கும். இனத்தவர்களைத் தூரத்தில் வைத்துக்கொள்ளக்கூடுமானல் வாரமிகுதி நல்லாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவபரிபாலனசபை வெளியீடு

## கல்விப் பொதுத் தராதரப் பத்திரத் தேர்வுக்குரிய நூல்கள்

[ G. C. E. ]

**இலக்கியம்**

கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1—170)
உரையாசிரியர் : வித்துவான், பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனார் அவர்கள். விளக்கவுரை, தேர்வுவினாக்கள் முதலியவற்றுடன். விலை ரூபா 3-00.

**சைவ சமயம்**

பதிப்பாசிரியர்: பண்டிதர் ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை

திருவருட்பயன் விளக்கவுரையுடன்
உரை ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A. விலை சதம் — 75.

திருக்குறள் மூலமும் உரையும் (25 — 34)
ஆங்கில மொழிபெயர்ப்புடன் விலை சதம்—75

சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் ,, ,, —75

தேவார திருவாசகத்திரட்டு உரையுடன் விலை சதம்—65

## செயற்கைச் சந்திரனை வியக்கின்றார் பிரித்தானிய ஆகாயப்படை அமைச்சர்

"கண்டம் விட்டுக் கண்டஞ் சென்று, கருதியது முடிக்கக் கூடிய வாணக் குண்டுகளைப் படைப்பதற்கு 'ஸ்பூதினிக்' என்னும் செயற்கைச் சந்திரனிலிருந்து வரும்குறிப்புக்கள், போர்க் கலைக்குப் பெருந் துணையாகும்" என்று கூறி வியப்படைகின்றார் பிரித்தானியப் படை அமைச்சர்.

"இரண்டாவது செயற்கைச் சந்திரனின் சிறப்பியல்பு அதன் நிறையேயாகும் (10 அந்தர்). கண்டம் விட்டுக் கண்டம் செல்லக்கூடிய வாணக் குண்டுகளைப் படைக்கும் ஆற்றலைப் பெறுவதில் ரஷ்யா வெற்றி பெற்றுவிட்டது என்பதை இது தெற்றென விளக்குகின்றது".

# வாழ்க்கையோடு இணைந்த இலக்கியமே நிலை நிற்கும்

[காரைக்குடி அழகப்பாக் கல்லூரிக் கலைவிழாவில் பேராசிரியர் அ. சு. ஞானசம்பந்தன் எம். ஏ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள இலக்கியந்தான் வாழ்க்கைக்கு உகந்தது என்று கூறுவது தவறு. இன்றும் அன்றும் ஒத்துக்கொள்ளக்கூடியனவும், கூடாதனவும் இருந்தன இருக்கிறன. இலக்கியத்துக்கு ஒரு நிலைக்களம் வேண்டும். புதுமை என்ற காரணத்தால் உடனே அதை யாரும் பார்க்கத் தோன்றுகின்றது. இது மனித இயல்பு. இலக்கியம் வெறும் கற்பனையாக மாத்திரம் இருந்தால்நிலைக்காது வாழ்க்கையோடு ஒட்டிய குறிக்கோளும் இருந்தால் தான்நிலைக்கும்.

எகிப்து இத்தாலி ஆகிய நாட்டில் சில உயர்ந்த இலக்கியங்கள் உண்டு ஆனாலும் அவை கற்பனையாக இருந்ததால் நிலைக்கவில்லை. ஆனால் நமது தமிழ் இலக்கியம் வாழ்க்கையின் குறிக்கோளைக் கொண்டது மேலும் மேலும் விரிவடைந்து வரும் இலக்கியப் பார்வையும் உள்ளதால் வளர்ந்துகொண்டே வருகிறோம். உதாரணமாக நமது இலக்கியத்தில் மணிமேகலை சரியாக நிலைகொள்ள வில்லை. ஆனால் சிலப்பதிகாரம் நிலை பெற்ற இலக்கியமாக உள்ளது.

அன்றைய சங்ககால இலக்கியங்கள் அத்தனையும் உண்மையென்றோ அல்லது பொய்யென்றோ கூறிவிட முடியாது. ஆனால் அது அன்றைய மக்களின் வாழ்க்கை நிலைமையினை எடுத்த இயம்புவதாகும்.

குறிக்கோள் நிறைந்த இலக்கிய நிலைக்கும் குறிக்கோளும் உயர்ந்து கொண்டே போனாற்றான் வாழ்க்கை சுவைக்கும். இலக்கியத்திற்கு உரிமை மட்டும் இருந்தாற் போதாது. மன எழுச்சியும் வேண்டும்.

தமிழ் நாட்டிலே தோன்றிய சமய இலக்கியங்கள் கூட வாழ்க்கையோடு இணைந்து வந்த நூல்களாகும் பெரும்பாலும் அதனால் அவை சமயநூலாகப் பார்க்கப்படாமல் இலக்கிய வரிசையில் இடம் பெறுகின்றன. ஆனால் மேனாடுகளில் சமய நூல்கள் சமயநூல்களாகவே இருக்கின்றன. ஏழாம்நூற்றாண்டில்தோன்றிய ஞானசம்பந்தர் தமிழ் நாகரிகத்தை நிலை நிறுத்தினர். உலக இலக்கியத்திற்கு ஈடாக நமது சமய இலக்கியங்கள் இருக்கின்றன.

தொல்காப்பியம் முதல் சிந்தாமணிவரை நூல்களில் தமிழ் உணர்வு, கடவுள் உணர்வு, சமய உணர்வு, மக்கள் உணர்வு இணைந்து நிற்பதைப் பார்க்கிறோம்.

தமிழ் இலக்கியத்திற்குப் பலகாரணத்தால் உயர்ச்சியும் சில காரணத்தால் வீழ்ச்சியும், இடைக்காலத்தில் தில் ஏற்பட்டது போதும் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் குறிக்கோள் நிறைந்ததாகவும், உள்ளத்தைத் தூண்டும் தூண்டுகோலாகவும் உயர்ந்து கொண்டும் போகிறது. இக்கால இலக்கியங்களுட் சில தொழிலாளி இலக்கியம் என்றும் வேறுபல பெயர் கொண்டும் வாழ்வோடு ஒட்டாமல்தனித்தனியாக இயங்குவதைப் பார்க்கிறோம். நம் வாழ்வோடு இணைந்த இலக்கியமேநிலைபெற்ற இலக்கியமாகும்.

## கல்வித் திருத்தம்பற்றி இராஜாஜி கூறுவன

"கல்வியில் பாடத்திட்டம் போதனை ஆகியவைகளில் பின்னர் யாரும் தலையிடக் கூடாது என்பதற்காக அசைக்கத்திருப்ப முடியாதபடி சட்டபூர்வமாக நிர்ணயிப்பதானது பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஒன்றும்தெரியாதவர்கள் என்று எண்ணுவதாகும். இவைகளை இவை சம்பப்பட்ட துறையினர், கல்வி நிபுணர்கள் ஆகியோரிடம் விடவேண்டும். அரசாங்கமும், அரசாங்க ஆலோசகர்களும் இதுபற்றி அவ்வப்போது கலந்து பேசி முடிவு செய்வது நல்லது. சட்டசபையில கல்வித்திட்டங்களை வாக்கெடுப்புக்கு விடும் நிலைமை கூடாது. அவ்வாறு வாக்கெடுப்புக்கு விடுவதால் இவைகள் அரசியல் சிக்கல்களாகிவிடுகின்றன."

"கல்விக்கு உதவி அளிப்பதும் மேற்பார்வையிடுவதும் அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் நிருவாகம், நிதி ஆகியவற்றிலே தான் மேலாதிக்கம்வேண்டும்.

ஆசிரியர்கள், அரசினர், ஆலோசகர்கள் கல்வித்துறை இயக்குனர் ஆகியோர் அவ்வப்போது கலந்து ஆலோசித்து கல்வி பற்றிய திட்டங்களைத் திருத்த வேண்டும்.

# சைவ சமயக் கல்வி

## மாணிக்கவாசகர்

### அமைச்சராதல்

தமிழ் நாடென்று சிறப்பிக்கப்பெறும் பாண்டி நாட்டில் வையையாற்றின் வளம் கொழுக்குக்கும் ஒரு வாதபுகழ் படைத்த திருவாதவூரிலே அமாத்திய அந்தணர் குலத்தில் சம்பு பாதாசிரியர்க்கும், சிவஞானவதி அம்மையார்க்கும் தோன்றிய திருமகனார்க்குத் திருவாதவூரர் என்று பெயரிட்டு வளர்ந்து வந்தனர். அவர் கலைபல கற்றுப் பதினாறு வயது நிரம்பப்பெற்றபோது பாண்டிய அரசன் அவரை வருவித்துத் 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப்பெயர் தந்து தன் அமைச்சாக்கிக்கொண்டான். திருவாதவூரர் அரசனுக்குக் கண்ணும் கவசமும் போலிருந்து காத்து வந்தார். சைவ நூல்களை ஆராய்ந்து பதி, பசு, பாசங்களின் உண்மையுணர்ந்து, ஞானாசிரியரைத் தேடியலைந்துகொண்டிருந்தார்.

### குதிரை வாங்கச் செல்லுதல்

ஒருநாள் பாண்டியனிடம் சில தூதுவர் வந்து, கீழ் கடற்கரையில் ஆரிய வணிகர்கள் குதிரைகளைக் கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். பாண்டியன் அமைச்சராகிய திருவாதவூரரிடம் பெருநிதி கொடுத்துக் குதிரை வாங்கி வருமாறு பணித்தான். அவர் சிவிகை யூர்ந்து பலகாதங் கடந்து திருப்பெருந் துறையை அடைந்தார். அங்குச் சிவபெருமான் ஞானாசிரியர் வேடங்கொண்டு குருந்த மரத்தின்கீழ் மாணாக்கருடன் தங்கியிருந்தார். அவரைக்கண்ட திருவாதவூரர் சிவஞான போதத்தின் பொருளைக் கேட்டறிந்து விழுந்து வணங்கிக் கைகளைத் தலைமேற் குவித்து நின்று ஆட்கொள்ளவேண்டினர். இவரது பரிபக்குவமறிந்து ஆசிரியர் இசைந்தருளினர்.

### ஞானோபதேசம் பெறுதல்

ஞானாசாரியர் வாதவூரர் திருமுடிமேல் திருவடிசூட்டி முறைப்படி ஞானோபதேசம் செய்தருளினர் திருவாதவூரரைப் பற்றியிருந்த மாயை நீங்கி மெய்யுணர்வு தோன்றியது. முப்பொருள் உண்மையும், சரியை கிரியை, யோகம், ஞானங்களும் உணர்த்தப்பெற்றார். உலகை மறந்து பரவசமான வாதவூரர் தம் உடல் பொருளாவியை ஞானாசிரியரிடம்ஒப்புவித்துப்பாண்டியன் பரிவாங்கக் கொடுத்த பொருள்களையும் காணிக்கையாக வைத்தார். "இப்பொருள்களைத் திருப்பணியிற் செலவிடுக" என்று ஆசிரியர் அருளினர். திருவாதவூரர் நாவில் ஞானகலைமகள் வந்து தங்கினாள். மாணிக்கம்போன்ற சொற்களை மாலையாகத் தொடுத்துப் பாடினமையால் அவருக்கு 'மாணிக்கவாசகர்' என்னும் பெயரை, ஆசிரியர் இட்டருளினர். தாம் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் ஆலயத் திருப்பணிக்கும், அடியார்களுக்கும் செலவிட்டார். மந்திரியாயிருந்த அவர் பித்தர் போன்ற நிலையை அடைந்தார்.

### அரச தண்டனை

குதிரைகள் வராதது கண்ட பாண்டியன் வாதவூரர்க்குத் திருமுகம் எழுதியனுப்பினன். அவர் இறைவர் திருமுன் இதனை விணப்பித்தார். "நீ முன்னே மதுரைக்குச் சென்று ஆவணி மூலத்தில் குதிரைகள் வருமென்று பாண்டியனுக்குச் சொல்க" என்று இறைவர் கூறி அரசனுக்குக் கையுறையாக அளிப்பதற்கு ஒரு மாணிக்கத்தைக் கொடுத்தருளினர். மாணிக்கவாசகர் மதுரையையடைந்து பாண்டிய மன்னனைக்கண்டுமாணிக்கத்தைக் கொடுத்தார். அதைக்கண்டு மன்னன் வியந்தான். ஆவணி மூலத்திற் குதிரைகள் வருமென்று கூறினர். அரசன் இன்மொழி கூறிப் பரிசுகள் கொடுத்தனுப்பினன். வாதவூரடிகள் மகிழ்ச்சியுடன் தம் திருமாளிகையையடைந்தார்,

மற்றோரமைச்சன்சொற் கேட்டுத்திருப்பெருந்துறையில் குதிரைகள் இல்லையென்பதை ஒற்றரால் அறிந்த பாண்டியன், வாதவூரரைச் சிறையில் அடைக்கச் செய்தான். அப்போதும் அரன் அடியைத் துதித்துக்கொண்டிருந்தார். மறுநாள் மாணிக்கவாசகரைக் கொடிய வெயிலில் நிறுத்தித் துன்புறுத்துவாராயினர். அவர் சிவபெருமான் அருளாமை குறித்து இரங்கி வேண்டித் துதித்தார்.


(வரும்

## ஆங்கிலம் உலகமொழி

ஆங்கிலம் உலக மொழியாகஇருப்பதால் அதைஇந்தியமக்கள் கற்பதுஇன்றியமையாதது. எனவே இந்த யோசனை வரவேற்புக்குரியதேயாகும். ஆனால் இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு இந்திய மொழியும் கற்பிக்கப்படவேண்டும் என்ற யோசனைவரவேற்கக்கூடியதல்ல. மாணவர்களைப் பல மொழிகளைக் கற்கும்படிச் செய்வதனால் அவர்களுக்குத் தொல்லை மிக ஏற்படும். எதிலும் ஊன்றிய கருத்துச் செலுத்திச் சிறப்புப் பெறமுடியாது அவர்கள் மூன்றாவது மொழி ஒன்றையும் கற்பதற்குப் பதிலாக வேறு ஏதாவது பாடம் கற்றால் அறிவு வளர்ச்சி அடைவதுடன் வாழ்க்கையில் அதுபயனுள்ளதாகவும் இருக்கக்கூடும். ஆகவே இந்தி மொழியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கும் யோசனையையும் இந்தி பயிலாவிடில் வட்டார மொழியல்லாத வேறொரு மொழியைக் கற்க வேண்டுமென்ற திட்டத்தையும் விட்டுவிட வேண்டுமென வற்புறுத்துகிறோம்

— தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கல்வி விளக்கம்

கல்வித் துறையில் இந்தியாவிலும் இலங்கையிலும்-பலப்பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

நல் வாழ்க்கைக்குத் துணையாயுள்ள கல்வியே கல்வி எனப்படும் என்பது கற்றோர் கொள்கை. 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்' என்பது யாவரும் அறிந்ததே. எனினும் நாட்டில் (அரசினரால்) நடத்தப்படும் பரீட்சைத் திட்டம் எவ்வாறு அமைகின்றதோ அதற்கு அமையும் பான்மையுள்ள கல்வியே பாடசாலைகளிற் பயிலப்படுகின்றது; பயிற்றப்படுகின்றது. ஆசிரியர், மாணாக்கர் பெற்றோர் என்போருட் பெரும்பாலானோரின் நோக்கமும் விருப்பமும் இதுவே எனல் மிகையாகாது.

உத்தியோகத்துட் செலுத்தக் கூடிய ஒரு சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே பலரின் நோக்கம். இச் சீட்டு நேர்மையான வழியிற் பெறப்பட்டாலென், நேர்மையில்லாத வழியிற்பெறப்பட்டாலென்' என்று எண்ணுவார் இல்லாமல் இல்லை.

உத்தியோகமும் ஒரு தொழிலிலே. ஆதலால் இக்காலக் கல்வியும் உண்மைக் கல்வியின்பாற்படாது 'தொழிற் கல்வி'யின் பாற்படுகின்றது. சுருங்கக் கூறுமிடத்து எஸ். எஸ் ஸி., ஜி. ஸி. ஈ. போன்ற பரீட்சைகளை எவ்வாற்றானும் முடித்து ஒரு தொழிலுக்கு ஒரு பிரவேசச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இக்கால நோக்கம் எனலாம். இத்தகைய கல்வியைச் 'சோதனைக் கல்வி' என்றும் கூறலாம்.

கல்வித் துறையில் ஆரவாரங்கள் மிகுதியாக நிகழ்கின்றன. இங்கும் அங்கும், இலங்கையிலும் இந்தியாவிலும். உண்டி உடை உறையுள் என்னும் முப் பொருளையுமே தழுவி நிகழும் கல்வியின் நோக்கம் வேறு எதுவாகலாம்? இதுபற்றிப் போலும் அறநெறிச் சாரமுடையாரும்,

"பயிற்றிப் பயிற்றிப்
பலவுரைப்ப வெல்லாம்
வயிற்றுப் பெருமான்
பொருட்டு"

என்று கூறிப் போந்தார்.

எதிர்காலத்தில் வரப்போகிற ஜீ. ஸி. ஈ. சோதனைக்கு முக்கிய பாடங்கள் மூன்றும் விருப்பின்படி அமையும் பாடம் மேலும் மூன்றும் என்று புதினத்தாள்கள் வாயிலாக அறிகின்றோம்.

முக்கிய பாடங்களுள் முதலாவது பாடம் தாய் மொழியாகும்; இரண்டாவதுபாடம்: தமிழ் மொழியினைத் தாய்மொழியாகவுடையார்க்கும், சிங்கள மொழியினைத் தாய்மொழியாகவுடையார்க்கும் இரண்டாம் பாடம் ஆங்கிலம் ஆகும் என்றும்; ஆங்கிலத்தைத் தாய்மொழியாகவுடையார்க்கு இரண்டாவது பாடம் தமிழ் ஆகவோ சிங்களமாகவோ அமைய வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. எனவே முக்கிய பாடங்களுள் (மூன்று பாடங்களுள்) ஆங்கிலம் எவர்க்கும் கட்டாய பாடமாக அமைகின்றது.

ஆங்கிலம் இன்றியமையாத பாடம் என்பதை உணர்ந்தே இங்ஙனம் கூறம்பட்டது.

இயற்கைச் சந்திரர்களின் இயக்கத்தைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். ஆச்சரியப்படுகின்றோம். சோவியத்து — ரஷ்ய விஞ்ஞானிகளைப் போற்றுகின்றோம்.

விஞ்ஞானக் கல்வி விரைவாக விருத்தி யடைகின்றது. விஞ்ஞான பாடமே இன்றியமையாத பாடங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. 'ஆங்கிலமொழி' எங்கட்கு ஏன் இன்றியமையாது வேண்டப்படுகின்றது? உலக அறிவினை, பல் நாட்டு அறிவினை, நாம் பெறுவதற்கு ஆங்கிலம் ஒரு திறவுகோலாக அமைந்துள்ளது.

"ஆங்கிலேயர் அகன்று விட்டனர்; சுதந்திரம் முற்றாகக் கிடைத்துவிட்டது' என்கின்றது இலங்கை. ஆங்கிலம் இன்றிக் கல்வி முன்னேற்றமடையலாம்; ஆங்கில நாகரிகம் இன்றிக் கல்வி முன்னேற்றம் அடையலாம்; ஆனல் ஆங்கிலம் இன்னும்பல ஆண்டுகளுக்காயினும் முக்கியமான இரண்டாவது மொழியாக விளங்குதல் வேண்டும், அறிவுக்குத் திறவுகோலாய் விளங்குகின்றதாதலால்-உலக மொழியாக நிலவுகின்றமையினுல். அரசியல் மொழி ஆங்கிலமா? ஆங்கிலமாகுமா? இதற்கு விடை இப்பொழுது இறுக்க இயலாது. 'ஆங்கிலம் யார்க்கு இன்றியமையாதது. அறிவினை — பல் நாட்டு அறிவினை பல்கலையினைப் பெற விரும்புநர்க்கேயாம்.

பல்கலைக் கழகத் துறைகளிற் படிந்துபயில விரும்புநர்க்கு ஆங்கிலம் கட்டாயமான இரண்டாவது மொழியாக அமைதல் வேண்டும் எனல் பொருத்தமுடைத்தே. தனித் தமிழ்க்கட்சியினருள் ஒருசாரார் சமஸ்கிருதத்தைத் தள்ளிவிட்டவாறு தனிச் சிங்களச்சட்டச் சார்பினர், ஆங்கிலத்தை அகற்றிவிட ஆர்வம் கொண்டு நின்றனர். ஆழ்ந்து ஆலோசித்தனர்; ஆங்கிலத்தின் இன்றியமையாமையை உணர்ந்தனர்.

எனினும் ஆங்கிலத்தினை யாவர்க்கும் கட்டாய பாடமாக்குதல் வேண்டற்பாலதொன்றன்று; அன்றியும் உடனடியாகவே ஆங்கிலம் ஜி. ஸி ஈ. போன்ற பரீட்சைகட்கு இரண்டாவது கட்டாயமாக்கப்பட்டால் இதுவரையும் தமிழ்ப் பாடசாலைகளாய்(அல்லது சிங்களப் பாடசாலைகளாய்) இருந்துவந்த பாடசாலைகளிற் பயின்று வந்த மாணவ மாணவியர் பெரிதும் இடர்ப்படுவர் என்பதற்குளட்டுணையேனும் ஐயமில்லை.

இரண்டாம்மொழி ஒன்றனைக் கட்டாய பாடமாக அமைத்தலால் நன்மையுண்டு.

இலங்கைப் பாடசாலைகளில் தமிழ் மாணவர்கட்குச் சிங்களமும், சிங்கள மாணவர்களுக்குத் தமிழும் இரண்டாவது கட்டாய பாடமாக அமையின் மிகவும் நன்றே வாழ்க்கைப் பயனையும் பல்கலைக் கழகப் பரீட்சைத் திட்டங்களையும் நோக்குமிடத்து, ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, அரபி என்பனவற்றுள் ஒன்று இரண்டாவது கட்டாய பாடமாகலாம்.

எனினும் இக்கட்டுப்பாடு உடனடியாக ஏற்படாது ஐந்து ஆறு ஆண்டு எல்லையில் ஏற்படலாம். இந்துக்கள், புத்தர், இஸ்லாமியர் என்பவர்க்கு, சமஸ்கிருதம், பாளி அரபு என்பன முறையேபயன்படும் ஆங்கிலம் யாவர்க்கும் பயன்படுவதொன்று. எதிர்வரும் ஐந்து ஆறு ஆண்டுப் பரீட்சைகட்கு, இரண்டாவது கட்டாய மொழிக்குப் பதிலாக தமிழ் இலக்கியம் II அல்லது சிங்கள இலக்கியம் II (சிறப்பாக அமைக்கப்பட்ட பகுதி) கட்டாய பாடமாக இடம்பெறலாம்.

உடனடியாக ஆங்கிலத்தை இரண்டாவது கட்டாய பாடமாக்கல் ஆங்கில மொழி(இன்றுவரை) நன்கு பயிலாத மாணவர்க்குப் பேரிடர் விளைக்கும்.

(தொடரும்)

— மா. பீதாம்பரன்

"கல்விக் கதிர்" — 4

## நற்பணி செய்தநாய் நஞ்சுண்டிறந்தது

—0—

குட்டிச் சந்திரனிலிருந்து 110 முறைக்குமேல் குவலயத்தை வலம் வந்த 'இலைக்கா' என்னும்பெயரிய நாய் நஞ்சுண்டிறந்தது. விஞ்ஞானத்தை வளர்க்க விஷமுண்டிறந்த தனக்கென வாழாப் பிறர்க்கு உரியளாய் வாழ்ந்தவள்.

x x x

## பொன்மொழி

பல்கலைக் கழக இளைஞர் விழாவில் குடியரசுத் தலைவர் இராஜேந்திரப்பிரசாத் கூறியன:

"இக்கால இளைஞர்கள் பரந்த மனப்பான்மையை வளர்க்க வேண்டும். விஞ்ஞான நூற்றுண்டினை எதிர்நோக்கவும் நாட்டினை உருவாக்கவும் இளைஞரிடம் வீரச் செயல் ஆற்றும் மனப்பான்மை அவசியம்."

# அக்கினி தோத்திரம்

[இஃது இருக்கு வேதத்திலுள்ள மந்திரங்களுள் ஒன்றன்மொழிபெயர்ப்பு. 'அக்கினி' சிவபெருமானுக்குரியபெயர்களுள் ஒன்று. "அவருக்குப் பல பெயர்கள் உள. அவைகள் அக்நி, ஆதித்யன் இந்திரன் வருணன், வாயு முதலியன" 'அக்நி' என்பதன் பொருள் 'முற்றறிவுடையவர்' என்பது.

"எரியலால் உருவமில்லை ... .... காண்டகு சோதியார்க்கு" என்றருளினர் திருநாவுக்கரசர். ஒண்சுடரானை உலப்பிலி நாதனை என்பது திருமந்திரம்].

**தீபமாகிய சிவனே போற்றி**

—பட்டினத்தடிகள்.

"1 அறிவனு மாகுவை யரச னுகுவை
நெறிவரு குரவனும் நிகழ்த்து நன்மகத்
திறைவனு மாகுவை யெம்மைக் காத்திடும்
அறவனு மாகுவை அங்கி நீயரோ.

2 மானிட ராகும்யாம் வகுத்த தூதுபோல்
வானுற வெழுந்திவண் வழுத்து பாடலும்
ஆனது நெய்யொடு மவியும் கொண்டுசென்
றேனைய சுரர்க்கெலா மியல்பி னீகுவாய்.

3 பாவக நின்னது பிறப்புப் பைம்புனல்
மேவிய வாயுவெவ் வாணி யாகுமிம்
மூவகை யாமென மொழிவ ராயினும்
தேவரிற் பெரியைநீ செப்பி னீண்டரோ.

4 நாதனீ யுயிரொடு மிறப்பில நன்மையும்
தீதற வருளுவை சிறப்பி னேகனுய்
ஓதிய மனிடர்க் குருவ மூன்ருெடும்
ஆதியு மிருதியு மகன்று மேவுவாய்.

5 மண்ணிடைத் தீயென வயங்கு வாய்பெரு
விண்ணிடைப் பரிதியாய் விளங்கு வாய்நடுக்
கண்ணிடை வாயுவிற் கதிர்செய் மின்னலாய்
எண்ணின்மூ வுருவொடு மிலங்குவாயரோ.

6 மனைதொறும் உவந்துநின் வரவு கொள்ளுவார்
நினைதரு தந்தையும் நிலவு மைந்தனும்
இனியசோ தரனுநன் னட்பு மீண்டிய
தனியுப காரியும் சாற்றில் நீயரோ.

7 ஏழ்கதி ரிலங்கிய வெழில்கொள் வானவ
தாழ்தரும் நினதடி யேங்கள் தாழ்வற
வாழ்வுறக் காட்டிய வடிவம் எத்தனை
கேழ்வர விவிதமாய்க் கிளர்ந்து தோன்றுமே.

8 ஒருபொழு துன்றனை யொளிரும் பொன்மயத்
திருமலி வடிவமும் திகழ்மூச் சென்னியில்
விரிசுடர்க் குஞ்சியும் விழுங்கி யாவையும்
எரிதரு வாயுமா யிலங்கக் காண்பமால்.

9 மற்றொரு பொழுதிடை வயங்கு மாயிரங்
கற்றைகொண் மருப்பொடும் கவினக் காண்பமால்
முற்றிய சுடர்விரி முகங்கொ ளாயிரம்
பெற்றிகொள் வழியொடும் பின்னர்க் காண்பமே.

10 சென்னிறப் பரிகளைப் பூட்டிச் செம்பொனல்
மின்னுற வகுத்ததோர் விளங்கு தேரின்மேல்
மன்னுறு மாருதம் வலியிற் றூண்டவே
இன்னொரு பொழுதிடை யெம்முன் றோன்றுவாய்.

11 நின்னடி பணிந்திடு மெமக்கு நேர்துயர்
என்னவும் களைந்தெம திருளும் தீவினைத்
துன்னிய வழுக்கினிற் றூலக்கி மாசறுத்
துன்னடித் துணையுற வுயர்த்து வாயரோ.

12 இறப்புவந் தெய்துழி யெமது மெய்யினை
உறப்படும் துகட்பொறை யோடு மாய்த்துநேர்
பிறப்பிறப் பில்லதோர் பிறங்கு மாவியை
வெறுப்பறக் கொண்டுநீ மேவு வாயரோ.

13 மேவியெம் மாவியை விளங்கு பேரொளி
தாவிய விடங்களில் தழைக்கு மின்பமார்
தூவரும் பதிகளிற் றூகளி லாரொடும்
ஓவற வுறைந்திட வுய்த்தி யாலரோ.

S. M."

(விவேகசிந்தாமணி X–11.)


## ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்

---

**திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்**

அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்தகை ஏலம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமானதும் வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலி இறை 'நாவலடியும் சுடலைப்பிட்டியும்' பரப்பு நில இலாச்சம் 50ம் கிணறுகளும் பனைகளும் பயிர்களும் உள்ள காணியை 1958-ம் ஆண்டு ஜனவரி மாசம் முதலாந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்க ஏலம் கூறப்படும்.

ஏல விற்பனவில் ஷை ஆதனத்தைக் குத்தகை ஏற்பவர் ஒரு வருடக் குத்தகைப் பணத்தை உடனே கட்ட வேண்டும்.

இந்துக் கல்லூரி அதிகார சபைக்கு ஷை குத்தகையை அங்கீகரிக்கும் அல்லது புறக்கணிக்கும் உரித்து உண்டு குத்தகையை அதிகாரசபை அங்கீகரித்தால் குத்தகையை ஏற்பவர் தனது செலவில் நொத்தாரிசுமூலம் குத்தகை உறுதி முடிப்பிக்கவேண்டும்.

நவம்பர் மாசம் 29-ம் திகதி 5 மணிக்கு ஷை ஆதனத்தில் நின்று குத்தகை ஏல விற்பனவு நடைபெறும்,

கௌரவ தனதிகாரி,
யாழ்ப்பாணம், யா. இ. க. அ. சபை.
M. 160 15, 22-11-57

# விளம்பரம்

தற்பொழுது மலேயா சமஷ்டியில் ரவூப்பில் வசிக்கும், இலங்கையின் சங்குவேலியைச் சேர்ந்த சின்னப்பு - துரைராசா ஆகிய நான் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத் தருவது:- நான் சங்குவேலியில் வசிக்கும் சின்னப்பு அரசரத்தினத்துக்குக் கொடுத்திருந்த பொது அற்ரோனி தத்துவப் பத்திரத்தை ரத்துச் செய்துவிட்டேன் எனப் பகிரங்கப் படுத்துகிறேன். ஆகவே மேற்படி சின்னப்பு அரசரத்தினம் எனது சார்பாகச் செய்யும் எந்த உறுதிப் பத்திரங்களுக்கும் நான் பொறுப்பல்ல என்றும் என்னைக் கட்டுப்படுத்தமாட்டாதெனவும் அறியத் தருகிறேன்,

சி. துரைராசா

மத்திய மின்சார சபை,
ரவூப், மலாயா, 15-10-57.
M. 157 15-11-57.

## அறிவு வளர்ப்பதற்கே உள்ளது வாசிகசாலை

முதலியார் சி. முத்துத்தம்பி அவர்கள் தலைமையில் நடந்த ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க வாசிகசாலை அத்திபாரம் இடும் விழாவில் வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம ஸ்ரீகாந்தா அவர்கள் பேசும்போது உடல் ஆரோக்கியமாக வளர்தற்கு உறுப்புக்கள் திறம்படத் தொழிற்பட வேண்டியது எவ்வளவு அவசியமோ, ஒருசமூகம் வளர்தற்கு அதிலுள்ள மக்கள் சமாதானப் பிரியர்களாய்ச் சகோதரத்துவத்துடன் வாழுதல், அவ்வளவு அவசியமாகின்றது. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு வாசிகசாலைகள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஆனல் அவற்றைப் பயன்படுத்தும் முறையில்தான் அபிவிருத்தி தங்கியுள்ளது. அறிவைப் பெருக்கக்கூடிய நிலையமாக வாசிகசாலை பயன்படுத்தப்படுதல்வேண்டும். சோம்பேறிகள் நேரம் போக்குமிடமாக அவை மாறிவிடக் கூடாதென்று கூறினர்.

## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு மிசெலெனியஸ் வழக்கு இல 54

பின்னல் காணப்படும் காணிகளை வாங்க விரும்புவோர் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கடத்தாருக்கு 1957-ஆ மார்கழி மீ 2-ந் திகதிக்குமுன் (2-12-57) தங்கள் விண்ணப்பத்தை பிரத்தியேகமாக உறையுள்மூடி முத்திரையிட்டு (Sealed) சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர், அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களைக் கோடு ஏற்கவோ ஏற்காது விடவோ உரித்துண்டு. விண்ணப்பம் கோட்டுக் காரிபதரிசியின்கையில் கொடுக்க வேண்டும் அல்லது றிஜிற்ரர் போஸ்ரில் அனுப்ப வேண்டும்

விண்ணப்பங்கள் உறையின் இடதுகை நுனிமூலையில் பின்வருமாறு எழுதப்படல் வேண்டும்.

"யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு — மிசெலெனியஸ் வழக்கு இல 54, காணி வாங்குவதற்கு விண்ணப்பங்கள்"

### ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டதீவு இறை "மணியபற்று, நொச்சித் தோட்டம் நொச்சித்தாழ்வு பர நில. இலா 31-ம் $14\frac{3}{4}$ குளி மேற்படி பர. நில. இல: 8 இருவகைக்கும் கூடிய பர. நில. இலா. 40. பனையும் வேம்புகளும் கிணறும். எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளைக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கும் விசுவநாதர் மகள் நாகமுத்துவுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு கதிரவேலு எரம்புவுக்கும், ஐயம்பிள்ளை செல்லத்துரைக்கும் மறுபேருக்கும், முருகப்பர் வேலுப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு முருகப்பர் வேலுப்பிள்ளைக்கும், கணபதிப்பிள்ளை கைலாசபிள்ளைக்கும்உரிய ஆதனங்களும் கையொழுங்கையும், இதடங்கலும்.

2 மேற்படி மண்டதீவு இறை மயிலடிக்குருந்தன் காடு பர. நில இலா. 4 1/8 எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சிவகாமனுக்குரிய ஆதனம், வடக்கு கார்த்திகேசு அம்பலவாணருக்குடைய ஆதனம், மேற்கு அந்தோனிப்பர்னாந்து பெண் பிரகாசியம்மாவுக்கும் பங்காளருக்கும் உடைய ஆதனம், தெற்கு வீரகத்தி காத்திக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இதடங்கலும்.

3 மேற்படி இறை மயிலடிக் குருந்தன் காடு பர நில. இலா: 4 3/4, எல்லைகிழக்கு கந்தசுவாமி கோயிலுக்குரிய ஆதனம் வடக்கு கார்த்திகேசு கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு சுப்பையா நடராசாவுக்கும் பங்காளருக்கும் உடைய ஆதனம், தெற்கு கார்த்திகேசு அம்பலவாணருக்குமுடைய ஆதனம். இதடங்கலும்

4 மேற்படி இறை 'உந்துபற்று" பர நில இலா 3 குளி 15 கிணறும் மற்றும் செய்பயிர் வான் பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு சுப்பிரமணியம் பெண் அன்னபூரணிக்கும் சின்னத்தம்பி இராமலிங்கத்துக்குமுடைய ஆதனங்கள், மேற்கு சிதம்பரப்பிள்ளை பெண் பாறுபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உடைய ஆதனங்கள், தெற்கு இராமலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனம் இதடங்கலும்

5 மேற்படி இறை வேரம் கிழக்கு பர. நில. இலா, 3. அளவின்படி பர. நில. இல 2 குளி 12. எல்லை கிழக்கு சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு மண் ரோட்டு, மேற்கு இராமலிங்கம் வயித்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு விநாயகர் வைத்தியநாதரின் ஆதனம், இதடங்கலும்.

6 மேற்படி இறை "வேரம் கிழக்கு" பர. நில இலா. 5 குளி 3/8 எல்லை கிழக்கு சிவரத்தினம் பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளைக்கும் கார்த்திகேசு அம்பலவாணருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

7. மேற்படி இறை "வேரம் தெற்கு' பர, நில. இலா; 4 1/8 கிணறும், எல்லை கிழக்கு சுப்பிரமணியர் சுவாமி கோயிலுக்குரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி கார்த்திகேசுவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு முத்துக்குமாருவின் ஆதனம், தெற்கு கந்தப்பர் செல்லப்பாவுக்கும் வேலுப்பிள்ளை பெண் தெய்வானைக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

8 மேற்படி இறை "பெரிய பண்டகசாலை" பர. நில. இலா. 23. பனையும் வடலிகளும் கிணறும். எல்லை கிழக்கு கடற்கரை, வடக்கு சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு வயித்திலிங்கம் செல்லத்துரையின் ஆதனம், தெற்கு சந்தியா இராயப்பனுக்கும் மறுபேகைக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

9 மேற்படி இறை 'மணியவற்று" பர நில இல $\frac{3}{4}$ வடலிகளும் எல்லை கிழக்கும் தெற்கும் சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு கதிரவேலு சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், மேற்கு கார்த்திகேசு கதிரவேலனின் உரிமைககாரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், இதடலும்.

10 மேற்படி இறை "மணியபற்று" பர. நி. இல. $7\frac{1}{2}$ பனைவடலிகளும். எல்லை கிழக்கு சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளையின் ஆதனம் வடக்கு கார்த்திகேசு அம்பலவாணருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு சுப்பர் சின்னத்தம்பியின் உரிமைக்காரருக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும்உரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$)

R. Anantha Kumarasamy
Proctor for Petitioner
O 126 15-11

## தேவை

—0—

தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சுக்கோக்கும் வேலைசெய்யக் கூடிய திறமை வாய்ந்த ஒருவர் தேவை. உடனே விண்ணப்பம் செய்யவும்.

**மனேஜர், இந்துசாதனம்**

## வண்ணைச் சிவன்கோவிலில் சகஸ்ர சங்காபிஷேகம்

வருகிற கார்த்திகை முதற் திங்களன்று (18-11-57) வண்ணர்பண்ணைச் சிவன் கோவிலில் சோமவார உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று பிற்பகல் வைத்தீஸ்வர சுவாமிக்கு மகா சகஸ்ர (1008) சங்காபிஷேகமும் தையல்நாயகி அம்மையாருக்கு (108, சங்காபிஷேகமும் பின் வைத்தீசுவர சுவாமி இடபாரூடராக வெளிவீதி உலா வருதலும் நடைபெறும்.

இவ்வுபயம் சென்ற நாற்பது ஆண்டுகளாக காலஞ்சென்ற சைவசீலர் ஸ்ரீ சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களால் செய்யப்பட்டு இப்போது அன்னரின் புத்திரர்களால் நடத்தப்பெற்று வருவது. அத்துடன் இச் சங்காபிஷேகம் 37 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ் வருடந்தான் இக்கோவிசில் நடைபெறுகிறது.

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

வண்ணர்பண்ணை மேற்கு க. செ. க. செ. செல்லையாபிள்ளை என்னும் விலாசமுள்ள அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் அடைவு கடையில் 1955ம் ஆ ஏப்ரல் 1 உ முதல் 1956 மார்ச் மாதம் 31 உ வரை அடைவு வைக்கப்பட்டு தவணை தப்பி மீட்கப்படாதிருக்கும் கீழ்க் காணும் நகைகள் என்னல் 14-12-57 காலை 10 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| No | ஆூ மீ 1955 | உ | ரூ | ஊர் | பெயர் | சாமான் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| A 637 | மெய் | 23 | 25 | கச்சேரியடி | பொ. கந்தசாமி | சில் மோதிரம் 1 |
| A 697 | ,, | 30 | 19 | சாவகச்சேரி | ஐயாத்துரை குமரையா | வெ கல் புரூச் 1 |
| A 1059 | ஜூன் | 29 | 25 | K.K.S ரோட் 216 | பொ. முருகேசு | சிலகல்விழுந்த கெமிகல் பெண்டன் 1 |
| A 1622 | ஆகஸ்ட் | 15 | 200 | ஸ்டான்லிரோட் 8 | K. வேலாயுதபிள்ளை | பிரவுண் கல் பெண்டனுடன் டைமன் சங்கிலி 1 |
| A 1991 | செப். | 14 | 150 | சுன்னுகம் | S. பத்திநாதன் | பீமுத்து சில கல்விழுந்த மாலை பதக்கம் 1 |
| A 2012 | ,, | 16 | 25 | கன்னதிட்டி 45, | S. கணேசமூர்த்தி | அரக்கு வெள்ளி திருகுள்ள சிகல் கொண்ட பூ 1 |
| A 2096 | ,, | 21 | 100 | புத்தூர் மேற்கு | சரவணமுத்து மாரிமுத்து | நெளி வளையல் சோடி 1 |
| A 2183 | ,, | 29 | 10 | கஸ்தூரியார் ரோட் 96/4 | சு. செல்வராசா | வெ. கல். மூக்கு பிலாக்கு 1 |
| A 2224 | அக்ரோப. | 3 | 330 | சுன்னுகம் | சின்னக்குட்டி பொன்னம்பலம் | சில கல் 1ல் தொ இல்லாத வெ கல் பெண்டனுடன் அல்பேட் சங்கிலி 1 வளையல் சோடி 2 |
| A 2255 | ,, | 6 | 350 | பசார் ரோட் | M. A. C. மொய்தீன் | வெ கல் தோடு, காதுக்குச்சி சோடி 9 குண்டு வைத்தகு 1 பவுன் 1 சுதேசி பவுன் 1 சாதா பெண்டன் 1 மே வேலை செய்த அ $\frac{1}{2}$ பவுன் 1 |
| A 2258 | ,, | 22 | 25 | சங்கானை கிழக்கு | M. நடராசா | கல் முத்து தூக்கணம் சோடி 1 |
| A 2608 | நவம்பர் | 9 | 30 | கன்னதிட்டி 91/1 | S. பூரணலிங்கம் | கல் தூக்கணம் சோடி 1 |
| A 2643 | ,, | 10 | 20 | மானிப்பாய் ரோட் | தம்பு செல்வராசா | வெ கல் தொடு சோடி 1 |
| A 2865 | ,, | 24 | 65 | வட்டுக்கோட்டை | சுப்பையா இரத்தினசிங்கம் | நெளி வளையல் சோடி 1 |
| A 3040 | டிசம்பர் | 6 | 110 | உடுவில் | க முத்தையா | கல் மோதிரம் 1 நெளி வளையல் சோடி 1 |
| A 3155 | ,, | 13 | 60 | இணுவில் | வேலுப்பிள்ளை சரவணமுத்து | வாச்சு செயின் 1 |
| A 3276 | ,, | 21 | 50 | அல்லப்பிட்டி கிழக்கு | பொன்னம்பலம் செல்லையா | கல் புரூச் 1 |
| A 3278 | ,, | ,, | 50 | நாவலப்பிட்டி அம்புகாமம் ரோட் 156, | காந்திமதி | கல் புரூச் 1 |
| A 3296 | ,, | 22 | 70 | சுண்டிக்குளி | முத்து நடேசு | கல் மோதிரம் 1 சில கல் விழுந்த வெ. கல் புரூச் 1 |
| A 3407 | ,, | 31 | 215 | K. K. S. ரோட் | கா. கருத்தச்சாமி | வெ கல் பெண்டனுன் ஷை கல் பூ அட்டியல் 1 |
| | 1956 | | | | | |
| A 3463 | ஜனவரி | 3 | 20 | பருத்தித்துறை ரோட் | M. சுப்பிரமணியம் | கல் மோதிரம் 1 |
| A 3693 | ,, | 16 | 25 | நீர்வேலி வடக்கு | மு. நல்லதம்பி | பொட்டு 2 |
| A 3828 | ,, | 21 | 30 | தின்னவேலி கிழக்கு | K. கனகரத்தினம் | கல் மோதிரம் 1 |
| A 3948 | ,, | 25 | 55 | ஸ்ரான்லிரோட் 3. | S. சுப்பிரமணியம் | வளையல் சோடி 1 |
| A 3992 | ,, | 26 | 260 | 10ம் வாய்க்கால் உருத்திரபுரம் | K. நாகலிங்கம் | தடை 2டன் பழுது முறுச்சுக்குத்தி கொடி 1 |
| A 4199 | பிப்ரவரி | 6 | 20 | சுதுமலை | கிட்ணர் வல்லிபுரம் | வெ கல் தோடு சோடி 1 |
| | 1957 | | | | | |
| A 4572 | மார்ச் | 1 | 85 | மாதகல் | சின்னத்தம்பி நாகலிங்கம் | நெளி வளையல் சோடி 1 |
| A 4573 | ,, | ,, | 162 | ஷை | ஷை | செடிக் காப்பு சோடி 1 |
| A 4923 | ,, | 24 | 25 | நாவாந்துறை ரோட் 7/2 | வ. எலியாஸ் | கல்முத்து தூக்கணம் சோடி 1 |
| A 5005 | ,, | 29 | 30 | நவாலி | பரனந்து அந்தோனிப்பிள்ளை | வெ. கல் தோடு சோடி 1 கல் தூக்கணம் சோடி 1 |

14.12-57 எடுபட்ட நகைகள் புற நீங்கலாக மீதி காலை 10 மணியளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. பசுபதிச்செட்டியார்
வெங்கிஸ் மேஸ்தர். 15-11-57

M. 158 15 22-11-56.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முயல்வாருள் முதன்மையுடையான் இல்வாழ்வான்

## திருக்குறள் புகட்டும் பல சிறப்புக்கள்

இல்வாழ்க்கை யென்பது (இல்லின்கண் இருந்து இல்லாளோடு கூடி வாழ்தல் எனப் பொருள்படும். இதன் சிறப்பை வள்ளுவர் பெருமான் வளம்பெற வகுத்துக் காட்டியுள்ளார். அவற்றைச் சற்று ஆராய்வாம். முதற் குறளில் இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவான் அறவியல்பினையுடைய பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கு அழியாத் துணையாகுமென்றும், இரண்டாவது பாடலிலே துறவிகளுக்கும், வறியவர்களுக்கும், வேறு ஒருவருமின்றித் தம்பால் வந்து இறந்தவர்களுக்கும் இல்லின்கண்ணிருந்து வாழ்க்கை நடத்துபவனே துணையாக விளங்குவான் என்பதையும் நன்கு வலியுறுத்தியுள்ளார். அக் குறட்பாக்கள் இரண்டினையும் சற்று நோக்குவாம்.

"இல்வாழ்வா னென்பா
னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை"

"துறந்தார்க்குந் துவ்வா
தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான்
[றுணை"

மூன்றாவது பாட்டில் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத அறத்தை விளக்குகின்றார். அதாவது பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானின் சிறந்த அறமாகுமென்று, நான்காம் பாட்டில் மேற்கூறியதை வற்புறுத்துகின்றார். பொருளீட்டுங்கால் பாவத்தையஞ்சியீட்டி அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும், தென்புலத்தார் முதலியநால்வர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தானுமுண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன்வழி, உலகத்து எப்பொழுதும் நிற்றலேயல்லது இறத்தல் இல்லையென்கிறார். அப்பாடல்கள் வருமாறு:—

"தென்புலத்தார் தெய்வம்
விருந்தொக்கறானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

"பழியஞ்சிப் பாத்தூ
ணுடைத்தாயின் வாழ்
[க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று
[மில்"

ஐந்தாம் பாட்டிலே இல்வாழ்க்கையின் மேலான பண்பும் பயனும் விளக்கப்பட்டுள்ளது. ஒருவன் இல்வாழ்க்கையில் தன் துணைவி மேற் செய்யத் தகும் அன்பினையும் பிறர்க்குப், பகுத்துண்டலாகிய அறத்தையும் உடையவனாகி விளங்குவானாயின் அவ்வுடைமைதான் அவனுககுப் பண்பாகவும் பயனாகவும் விளங்குமென்கிறார். ஆறாவது பாட

**ஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர்**

**தெல்லிநகர்**

லில் இல்வாழ்க்கையை ஒருவன் தருமத்தின் வழியே செலுத்துவானாயின் அவனுக்கு அதிலும் மேம்பட்ட பயன் புறமாகிய நெறியிற் போய்ப் பெற முடியாது என்கிறார். அப்பாடல்கள்:

"அன்பு மறனு முடைத்தாயி
னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது"
"அறத்தாற்றி னில்வாழ்க்கை
யாற்றிற் புறத்தாற்றிற்
போஓய்ப் பெறுவ தெவன்"

ஏழாவது பாட்டில் இல்வாழ்க்கையின் இயல்பு கூறுகின்றார். இல்வாழ்க்கைக்கண் நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவான் புலன்களை விட முயல்வாருளெல்லாம் மேம்பட்டவனென்றும், எட்டாவதுபாடலிலேதவஞ் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப்பண்ணித் தானும் தன் அறத்தில் தவறாத இல்வாழ்க்கையானது அத்தவஞ் செய்வார் நிலையினும் பொறையுடைத்தெனவும் வற்புறுத்துகின்றார். அவ்விரு பாக்களையும் சற்று நோக்குவாம்.

"இயல்பினா னில்வாழ்க்கை
வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை"
"ஆற்றி னொழுக்கி
யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை
யுடைத்து"

ஒன்பதாம் பாட்டிலே அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே என்கிறார். அஃதாவது இல்லறம் துறவறம் என நூல்கள் கூறும் இருவகை அறத்தினும் இல்லறமே சிறந்ததென்றும், துறவறமும் பிறரால் பழிக்கப்படுவதில்லையாயின் அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்றென்றும், பத்தாம் பாட்டில் இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் பூமியின்கண் வாழ்பவன் பூமியிலுள்ளவனேயாயினும் வானின் கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுமெனவும் உரைக்கின்றார். அவ்விரு குறள்களையும் சற்றுக் கவனிப்பாம்.

"அறனெனப் பட்டதே
யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி
னன்று"

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்".

### வழக்குத் தாமசம் நீக்க வழி

—0—

வழக்கு விசாரணை செய்வது மாத்திரமே நீதிபதிகள் எதிர்காலத்திற் செய்ய வேண்டிய கடமையெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். எனவே இப்பொழுதிருப்பதுபோல் நீதிமன்ற நிர்வாகம் நீதிபதிகள் பொறுப்பிலிராது நீக்கப்பட்டு நீதிபதிகளின் நேரம் வழக்கு விசாரணைக்கு உபயோகப் படுத்தப்படலாமென்று கருதப்படுகின்றது.

---

### முப்பெருந் தமிழ்த் தலைவர்களுக்குச் ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தனக்குப் பின்னும் அவை தளராது நடக்க ஆகவேண்டிய அரண் செய்துபோயினர்.

கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கள், புதைபொருளாரய்ச்சித் துறைகளில் ஈழத்திலும் பாரத நாட்டிலும் அரும்பெரும் தொண்டாற்றிப் பின் பாரத நாட்டின் சிற்பக்கலை, நடனக்கலை, நாகரீகம், பண்பாடு, சமயம் முதலிய பல்வேறு துறைகளில் உலகம் போற்றும் உயர்ந்த நூல்களை ஆக்கிப் பரத கண்டத்தின் பழைமையையும், பண்பாட்டையும் உலகறியச் செய்தனர். சில ஆண்டுகளுக்கு முன்புதான் அவர் பூதவுடம்பு மறைந்தது. அவர் புகழுடம்பு என்றும் நிலவிக்கொண்டிருக்கும்.

இப்பெரியார்கள் மூவருடைய ஞாபகார்த்தமாக மூன்று உருவச்சிலைகளைப் புதுக்க அமைக்கப்படும் மாநகரசபை நூல் நிலையக் கட்டிட முன்றலில் நிறுவ வேண்டும். அக் கைங்கரியம் நூல்நிலையத் திறப்பு விழாவுக்கு முன் முற்றுப் பெறுதாயின் இவர்கள் மூவருடையபடங்களை மேற்படி நூல்நிலைய மண்டபத்தில்வைக்கவேண்டும். மேற்கூறிய ஒழுங்குகளை இம் மாநகரசபை செய்வித்தல் வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

---

## சைவசித்தாந்த வகுப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் திரு. சி. நாகையா அவர்களால் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த வகுப்பை டக்ரர் வ. பொன்னையா அவர்கள் B. A. (Hons) Ph. D. இலங்கை அரசாங்க தமிழாக்கப் பகுதி அங்கத்தவர் நடத்தி வருகின்றார்கள். வகுப்பு வாரந்தோறும் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சபை நாவலர் மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றது. குறித்த வகுப்பிற் சேர விருப்புகிற வர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**மு. மயில்வாகனம்**
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்
30—1—057. M 144 1,8,15-11

---


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாபநிதி**

**1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்


கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**
Std 14 சிறாப்பர்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 15-11-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org